**REVISED**

**செய்தி வெளியீடு எண்: 431** **நாள் : 07.08.2013**

**<u>வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் வருவாய்த்துறையின் சார்பில் செயல்படுத்தப்படும் பல்வேறு நலத்திட்டங்கள் அவற்றின் செயல்பாடுகள் குறித்து மாவட்ட வருவாய் அலுவலர்கள் மற்றும் வருவாய் கோட்டாட்சியர்கள் பங்கேற்ற ஆய்வுக்கூட்டம்</u>**

சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள ஏழை எளிய மக்கள் நிரந்தர ஏற்றம் பெற்றிடவேண்டும் என்கிற உயரிய நோக்கமதைத் தாரக மந்திரமாய்க் கொண்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொலைநோக்குப் பார்வையில், நல்ல பல திட்டங்களை; நாளும் செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக, வருவாய்த்துறையின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு நலத் திட்டங்கள் அவற்றின் செயல்பாடுகள் குறித்து கடந்த 02.08.2013 அன்று சேலம் மாவட்டத்தில் நீலகிரி, கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, கரூர், நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி, தஞ்சாவூர் மற்றும் சேலம் ஆகிய 10 மாவட்டங்களைச் சார்ந்த மாவட்ட வருவாய் அலுவலர்கள், வருவாய் கோட்டாட்சியர்கள் பங்கேற்ற ஆய்வுக்கூட்டமானது மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

திருவள்ளூர், சென்னை, காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம் கடலூர், அரியலூர், பெரம்பலூர், திருவாரூர், மற்றும் நாகப்பட்டினம் உள்ளிட்ட 11 மாவட்டங்களின் மாவட்ட வருவாய் அலுவலர்கள் மற்றும் வருவாய் கோட்டாட்சியர்கள் பங்கேற்ற ஆய்வுக்கூட்டமானது, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் ‘தோப்பு’ என்.டி. வெங்கடாசலம் அவர்கள் தலைமையில், , இன்று (07.08.2013) எழிலகம் வருவாய் கருத்தரங்க கூடத்தில்நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வருவாய்த்துறையின் செயலர் திரு. ககன் தீப் சிங் பேடி, இ.ஆ.ப., கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் முனைவர் தி. ஸ்ரீ. ஸ்ரீதர், இ.ஆ.ப., கூடுதல் தலைமைச் செயலர் / நிலஅளவை / நிலவரித்திட்ட ஆணையர் திரு. ரமேஷ்ராம் மிஷ்ரா, இ.ஆ.ப., முதன்மைச் செயலர் / நிலநிருவாக ஆணையர் முனைவர் திருமதி கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., நிலச்சீர்திருத்தத் துறை முதன்மைச் செயலர் / ஆணையர் திருமதி ஜெயஸ்ரீ ரகுநந்தன் இ.ஆப., நகர்புற நிலவரி மற்றும் நகர்புற நிலவரித்திட்ட இயக்குநர் திரு. பி. அண்ணாமலை, இ.ஆ.ப., பேரிடர் மேலாண்மை கூடுதல் ஆணையர் திரு. ஆஷிஷ் சாட்டர்ஜி, இ.ஆ.ப., நிலச்சீர்திருத்த இயக்குநர் திரு. ஜெ. சந்திரகுமார் இ.ஆ.ப., மற்றும் வருவாய் நிருவாக இணை ஆணையர் முனைவர் மு.ஜெயராமன் இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிமுகம் செய்யப்பட்டு, மாநிலம் முழுவதும் பெரும் வரவேற்பினைப் பெற்றுள்ள ‘அம்மா’ திட்டம், நடைமுறைகள் எளிமை படுத்தப்பட்ட புதிய விரைவுப் பட்டா மாறுதல் திட்டம், இலவச வீட்டு மனைப்பட்டா வழங்குதல், பெண்களை பெரிதும் கவர்ந்துள்ள விலையில்லா மிக்சி, மின்விசிறி மற்றும் கிரைண்டர் வழங்கிடும் திட்டம், 6ஆம் வகுப்பு முதல் பயிலும் மாணவ மாணவியர்களுக்குத் தேவையான அனைத்துச் சான்றிதழ் களையும் தாம் பயிலும் பள்ளியிலேயே வழங்குதல், முதியோருக்கான ஓய்வூதியத் தொகையினை விரைந்து வழங்குதல் மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உழவர் பாதுகாப்புத் திட்டம் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்டங்களின் செயல்பாடுகள் மற்றும் தற்போது வரவிருக்கும் வடகிழக்குப் பருவமழை தொடர்பான முன்னேற்பாடு பணிகள் ஆகியவை குறித்தும் விரிவான ஆய்வினை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் மேற்கொண்டார்கள்.

தலைமையுரையாற்றிய மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள், ‘மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தலைமையிலான இரண்டாண்டு கால ஆட்சியில், வருவாய்த்துறையின் வரலாற்றில் இதுவரையில் இல்லாத அளவிற்கு எண்ணற்ற நல்லபல திட்டங்களையும், அதனை விரைந்து நிறைவேற்றிட உரிய நிதியினையும் ஒதுக்கித் தந்துள்ளார்கள்.

குறிப்பாக, ஆண்டுக்கு ஒரு இலட்சம் இலவச வீட்டுமனைப் பட்டா, விரைவு பட்டா மாறுதல் திட்டம், ஆண்டுக்கு 20 புதிய வருவாய் வட்டங்கள் உருவாக்குதல், பணிகளை விரைந்து மேற்கொள்ளத் தேவையான புதிய பணியிடங்கள் மற்றும் புதிய வாகனங்கள், 5000 கிராம நிருவாக அலுவலகக் கட்டடங்களை புதுப்பிக்க ரூ.25 கோடி நிதிஒதுக்கிடு. வருவாய் அலுவலகங்களின் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட ரூ.5.41 கோடி நிதி ஒதுக்கிடு, மற்றும் கடலூர், திருப்பூர் மற்றும் தஞ்சாவூர் ஆகிய மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களுக்கான ஒருங்கிணைந்த பெருந்திட்ட வளாகங்கள் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்டங்கள் மற்றும் புதிய திட்டங்கள் அறிமுகம் செய்யப்பட்டு அவையாவும் திறம்பட செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

<u>‘அம்மா திட்டம்’</u>

மிகவும் குறுகிய காலத்தில் பொது மக்களிடம் மிகுந்த வரவேற்பினைப் பெற்றுள்ள திட்டம் மக்களைத்தேடி வருவாய்த்துறை ‘அம்மா’ திட்டம். இத்திட்டத்தின் கீழ், நாளதுவரையில் மாநிலம் முழுதும் 9,839 கிராமங்களில் நடத்தப்பட்ட முகாம்கள் மூலம் 25.28 இலட்சம் மனுக்கள் பெறப்பட்டு, அவற்றில் 15.77 இலட்சம் மனுக்கள் மீது தீர்வு காணப்பட்டுள்ளது 13,204 மனுக்கள் பிறதுறையின் நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டுள்ளது. இது வருவாய்த்துறையின் வரலாற்றில் மகத்தான சாதனையாகும். குறிப்பாக, திருவாரூர் மற்றும் அரியலூர் ஆகிய மாவட்டங்களில் பெறப்பட்ட மனுக்களின் மீது 100 சதவீதம் தீர்வு காணப்பட்டுள்ளது பெருமைக்குரிது.

<u>‘புதிய வருவாய் வட்டங்கள்’</u>

பொது மக்கள் தங்கள் கோரிக்கை தொடர்பாக எளிதில் வருவாய் வட்டங்களை அணுகிடும் வகையில், 4 இலட்சத்திற்கும் அதிகமாக மக்கள் தொகை உள்ள வட்டங்களை பிரித்து புதிய வருவாய் வட்டங்களை உருவாக்கிட வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். கடந்த இரண்டாண்டுகளில் 34 புதிய வருவாய் வட்டங்களை உருவாக்கி அறிவித்துள்ளார்கள். மேலும், ஆண்டுக்கு 20 புதிய வட்டங்களை உருவாக்கிடவும் உத்தரவிட்டு உள்ளார்கள். குறிப்பாக சென்னை மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், தற்பொது செயல்பட்டு வந்த 5 வருவாய் வட்டங்களை பிரித்து கூடுதலாக 5 வட்டங்களை உருவாக்கிட உத்தரவிட்டுள்ளார்கள்.

<u>‘விலையில்லா மிக்சி, கிரைண்டர் மற்றும் மின்விசிறிகள் வழங்கிடும் திட்டம்’</u>

பெண்களை பெரிதும் கவர்ந்துள்ள விலையில்லா மிக்சி, கிரைண்டர் மற்றும் மின்விசிறிகள் வழங்கிடும் இத்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு ஆண்டும் இரண்டு கட்டங்களாக 60 இலட்சம் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. நாளது வரையில் மாநிலம் முழுதும் 57.75 இலட்சம் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

<u>‘சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ஓய்வூதியங்கள்’</u>

இத்திட்டத்தின் கீழ், மாநிலம் முழுதும் 27.87 இலட்சம் முதியோர், ஆதரவற்றோர், உடல் ஊனமுற்றோர், விதவை மற்றும் மாற்றுத் திறனாளிகள் ஆகியோருக்கு மாதம் ரூ. 1,000/– ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. ஓய்வூதியப் பலன்கள் விரைவாக சென்றடைந்திட வேண்டும் என்கிற உயரிய நோக்கத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிமுகம் செய்யப்பட்டுள்ள ‘பயோ மெட்ரிக் கார்டு’ மூலம் 2000க்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட கிராமங்களில் வசிக்கும் ஓய்வூதியதாரர்களுக்கு ‘பயோ மெட்ரிக் கார்டு’ திட்டத்தின் மூலமாக வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், சென்னை தவிர அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டமானது செயல்படுத்தப்பட்டு வருகிறது. நாளது வரையில், 4,348 கிராமங்களில் வசிக்கும் 6.69 இலட்சம் பயனாளிகளுக்கு வங்கிகள் மூலம் ஓய்வூதியம் துரிதமாக வழங்கப்பட்டு வருகிறது..

**'பள்ளி மாணவ மாணவியருக்கான அனைத்து வகையான சான்றிதழ்கள் வழங்கிடும் திட்டம்'**

பள்ளிகளில் பயிலும் 6, 10 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவ மாணவியர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்குத் தேவையான அனைத்து வகையான இருப்பிடச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ் மற்றும் வருமானச் சான்றிதழ் ஆகியவற்றை தாம் பயிலும் பள்ளிகளிலேயே பெற்றிட வழிவகை செய்யப்பட்டு, நாளது வரையில், 14,63,780 மாணவர்களுக்குத் தேவையான அனைத்து வகையான சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளன

**'இலவச வீட்டுமனைப் பட்டா மற்றும் புதிய விரைவு பட்டா மாறுதல் திட்டம்'**

ஆண்டுக்கு ஒரு இலட்சம் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கிட நிர்ணயிக்கப்பட்ட இலக்கினை விஞ்சி, கடந்த இரண்டாண்டுகளில் 2.53 லட்சம் வீட்டுமனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. நடப்பு நிதியாண்டில் 2 இலட்சம் வீட்டு மனைப் பட்டா வழங்கிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, நாளதுவரையில், 84,901 இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களால் அறிமுகம் செய்யப்பட்டு மாநிலம் முழுதும் நல்ல வரவேற்பினைப் பெற்றுள்ள 'விரைவு பட்டா மாறுதல் திட்டம்' இத்திட்டத்தின் கீழ், நாளது வரையில் 28,85,045 பட்டா மாறுதலுக்கான உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ளன.

**'முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம்'**

'முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டமும் மிகவும் உன்னதமான திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ் இதுவரையில், 1,68,08,359 நபர்கள் மூல உறுப்பினர்களாகவும், 1,25,78,160 நபர்கள் உறுப்பினர்கள் சார்ந்தவர்களாக ஆக மொத்தம் 2,93,86,519 நபர்கள் கணக்கெடுக்கப் பட்டுள்ளார்கள். இவர்களுக்கு எல்காட் நிறுவத்தின் மூலம் அடையாள அட்டை வழங்கிடும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் கல்வி உதவி, திருமண உதவி, இயற்கை மரண உதவி, விபத்து நிவாரணம், ஈமச்சடங்கு செலவு, முதியோர் ஓய்வூதியம், புற்றுநோய், காசநோய், சிறுநீரக நோய் மற்றும் கொடிய நோயினால் பாதிக்கப்பட்டு தற்காலிக உடல் திறனற்ற காலத்திற்கான ஓய்வூதியம், எச்ஐவி நோயினால் உயிரிழந்த உறுப்பினர்களின் அனாதை குழந்தைகளுக்கு மாத உதவி போன்ற உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்று நாளதுவரையில், 16,32,272 நபர்களுக்கு ஓய்வூதியமும், 7,22,029 நபர்களுக்கு பல்வேறு உதவித் தொகையாக 1,906 கோடியே 17 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது மகத்தான சாதனை என்று பெருமையோடு குறிப்பிட்டார்கள்.

**'வறட்சியால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கான நிவாரண உதவித் தொகை'**

இந்தியாவிலேயே முதன்முறையாக, பயிர் இழப்பீட்டிற்காக மட்டும் ஏறத்தாழ 1,376.71 கோடி ரூபாய் உடனடி நிவாரண உதவித் தொகை வழங்கிட மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். அதனடிப்படையில், டெல்டா மாவட்டங்களைச் சார்ந்த 3,52,613 இலட்சம் விவசாயிகளுக்கு 524.25 கோடி ரூபாய் பயிர் இழப்பீட்டுத் தொகையானது, விவசாயிகளின் வங்கிக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளளது. மேலும், டெல்டா அல்லாத வறட்சியால் பாதிக்கப்பட்டு 50 விழுக்காட்டிற்கும் மேல் மகசூல் இழப்பு ஏற்பட்டு பாதிக்கப்பட்ட மாவட்டங்களைச் சார்ந்த 17,94,432 விவசாயிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 835 கோடியே 21 இலட்சம் ரூபாயில், நாளது வரையில், 803 கோடியே 69 இலட்சம் ரூபாய் பயிர் இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டு 17,34,569 விவசாயிகள் பயனடைந்துள்ளார்கள். ஏறத்தாழ 96 விழுக்காடு இழப்பிட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளதும் மகத்தான சாதனை என்று குறிப்பிட்டார்கள்.

**<u>'தேசிய மக்கள் தொகை கணக்கெடுப்புத் திட்டம்'</u>**

**இத்திட்டத்தின்கீழ், நாளது வரையில், மாநிலம் முழுதம் 3.63 கோடி நபர்களுக்கு உயிர் புள்ளியியல் அடிப்படையில் (Bio Metric Enumeration) பயோ மெட்ரிக் மூலம் அடையாளம் பதிவு செய்யப்பட்டு, 2.43 கோடி நபர்களுக்கு ஆதார் எண் வழங்கப்பட்டுள்ளது. குறிப்பாக ஆய்வுக்கான 11 மாவட்டங்களில் அரியலூர் மற்றும் பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில் கணக்கெடுப்புப் பணி முழுமை பெற்றுள்ளது. ஏனைய 9 மாவட்டங்களில் 1.30 கோடி நபர்களுக்கு அடையாளங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது.**

**நமது வருவாய்த்துறையின் சார்பில் செயல்படுத்தப்படும் அனைத்து திட்டங்களும் உரிய நேரத்தில் அது உரிய மக்களைச் சென்றடைந்திட வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளதோடு, திட்டங்களை நடைமுறை படுத்திடும் போது ஏற்படும் இடர்பாடுகளைக் கேட்டறிந்து அவற்றை உடனுக்குடன் களைந்திட உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். குறிப்பாக பேரிடர் காலங்களில், போர்க்கால அடிப்படையில் நாம் பிற துறைகளுடன் ஒருங்கிணைந்து பணியாற்றி நமது துறைக்கும் எனைய பிறதுறைகளுக்கெல்லாம் முன்னோடியாய் விளங்கிடும் வருவாய்த் துறைக்கு பெருமையினை தேடித்தர நாம் அனைவரும் ஒருங்கிணைந்து பணியாற்றிட வேண்டுமாறு கேட்டுக் கொண்டார்கள்.**

வெளியீடு:

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9